Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், அக்டோபர் 28, 2026 | இதழ் 198

## அனைத்து அரசு பொதுத்துறை நிறுவன தொழிலாளர்கள், பணியாளர்களுக்கு 20% தீபாவளி போனஸ்: முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை, 28 அக்டோபர் 2026: அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தொழிலாளர்களின் அயராத உழைப்பு, அர்ப்பணிப்பு, திறன் மிக்க மனிதவளம் மற்றும் அரசின் தொலைநோக்குக் கொள்கைகள் ஆகியவை மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், உள்நாட்டு மற்றும் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும் முக்கியப் பங்காற்றுகின்றன.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டிற்கும் முக்கியப் பங்களிக்கும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் உழைப்பையும், அர்ப்பணிப்பையும் அங்கீகரித்து, அவர்களை ஊக்குவிக்கும் வகையில், 2025-26ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

1.இலாபம் ஈட்டியுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கக் கூடிய உபரித் தொகையை கணக்கில் கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

2.தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

3.ஒதுக்கக்கூடிய உபரித் தொகை இல்லாத பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் “சி” மற்றும் ‘டி’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.



4.தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றில் பணிபுரியும் தகுதியுடைய ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை வழங்கப்படும்.

5.தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணியக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு ரூ.3,000/- கருணைத் தொகையாக வழங்கப்படும். அரசின் இந்த நடவடிக்கை, பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர் கள் மற்றும் தொழிலாளர்கள் மேலும் ஊக்கத்துடன் செயல்படவும், எதிர் வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் வழிவகை செய்யும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதல்வர் விஜய் தலைமையில் நாளை அமைச்சரவை கூட்டம் நடைபெறும் என அறிவிப்பு



சென்னை 28, அக்டோபர் 2026: முதல்வர் விஜய் தலைமையில் நாளை அமைச்சரவை கூட்டம் நடைபெறும் என அறிவிப்பு. தமிழ் நாடு அமைச்சரவைக் கூட்டம் நாளை அக்டோபர் 29-ம் தேதி காலை 10:30 மணிக்கு நடக்கிறது.

கடந்த அக்டோபர் 15-ம் தேதி முதல்வர் விஜய் தலைமைச் செயலகத்தில் *தமிழ் நாடு குறைக்கடத்தி சூழலமைப்பு திட்டத்தை (Semiconductor Ecosystem)* தொடங்கி வைத்தார். காஞ்சிபுரம் மதுரமங்கலத்தில் "குறைக்கடத்தி மற்றும் மின்னணுவியல் பூங்கா" அமைக்க விதி 110-ன் கீழ் அறிவித்தார். இதற்கான முதலீடுகள், ஊக்கத் தொகை திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்க உள்ளதாக தகவல்.

தவெக அரசு பட்டினப்பாக்கத்தில் 25.55 ஏக்கரில் ரூ.1,200 கோடியில் 20 லட்சம் சதுர அடியில் புதிய தலைமைச் செயலகம் கட்ட அரசாணை வெளியிட்டது. ஆனால் அப்பகுதி மீனவர்கள், குடியிருப்பாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அக்டோபர் 29-ம் தேதியே ஆர்ப்பாட்டம் நடத்த அறிவித்துள்ளனர். அதே நாளில் அமைச்ச ரவை கூடுவதால், பட்டினப்பாக்கம் திட்டத்தை கைவிட்டு சென்னை பல்லவன் இல்லத்தில் (13.22 ஏக்கர்) புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் திட்டம் குறித்து முடிவு எடுக்கப் படலாம் என அதிகாரிகள் தகவல்

ஏற்கனவே தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா அறையிலேயே மின்வெட்டு ஏற்பட்டது. மாநிலம் முழுவதும் அறிவிக்கப் படாத மின்வெட்டு புகார், 4,500 மெகா வாட் கூடுதல் மின்சாரம் கொள்முதல் டெண்டர், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு, மழைநீர் வடிகால் பணிகள் தீவிரம் குறித்து ஆலோசிக்கப்படும். இந்த அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு முக்கிய அறிவிப்புகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இனி இதை செய்யாமல் விசா கிடைக்காது! இந்தியர்களுக்கு செக் வைக்கும் முக்கிய நாடு?




சென்னை 28, அக்டோபர் 2026: ஆஸ்திரேலியாவுக்கு பயணம் செய்து வரும் இந்தியர்களுக்கு விசா நடைமுறைகளை.அந்நாட்டு அரசாங்கம் தற்போது ஒரு மிக முக்கியமான கட்டுப்பாட்டை கொண்டு வந்துள்ளது. இனி இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு விசாகூறி விண்ணப்பிக்கும் நபர்கள் இனி கட்டாயமாக தங்களது கைரேகைமற்றும், முக அடையாளம் மட்டும் பயோமெட்ரிக் தரவுகளை சமர்ப்பிக்க வேண்டும் என டெல்லியில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் அதிரடியாக அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய நாட்டின் பாதுகாப்பு அமைப்பை மேலும் பலப்படுத்தும், விசா நடை முறைகளின் உள்ள குளறுபடிகளை தவிர்க்கவும்,இந்தியாவுடன் சேர்த்து மொத்தம் 60 நாடுகளை இந்த புதிய பயோமெட்ரிக் விதிமுறைகள் கடந்த அக்டொபேர் 26-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளன.

இந்த புதிய நடைமுறையின் படி அக்.26-க்கு மேல் புதிதாக விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் மட்டுமே .இந்த பயோமெட்ரிக் தரவுகளை வழங்க வேண்டும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது இந்த புதிய பயோமெட்ரிக் சோதனை இரண்டு வழிகளில் சமர்ப்பிக்கலாம். ஒன்று விண்ணப்பதாரர்கள் நேரடியாக ஆஸ்திரேலிய பயோமெட்ரிக் சேகரிப்பு மையத்திற்கு நேரில் சென்று தங்களுடைய கை ரேகை மற்றும் முக அடையாளத்தை பதிவு செய்யலாம். அல்லது ஏற்கனவே தங்கள் பயோமெட்ரிக் தரவுகளை பதிவு செய்து செல்லுபடியாகும் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள். ஆஸ்டெர்லியன் இன் என்ற அதிகாரப்பூர்வ மொபைல் ஆப் மூலமாகவே,எந்த ஒரு கட்டணமுமின்றி தங்கள் தரவுகளை மிக எளிதாக ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம் .

விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கும் இந்த அனைத்து பயோமெட்ரிக் தரவுகள் ஆஸ்திரேலிய மற்றும் உள்ளூர் தகவல் பாதுகாப்பு சட்டங்களின் படி மிகவும் பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் என அந்நாட்டு தூதரகம் அறிவித்துள்ளது .புதிய நடை முறையால் . விசாரணங்களுக்கும் தாமதம் ஆகாது என்றும் பயோமெட்ரிக் தருவகளை நீங்கள் எவ்வளவு சீக்கிரம் சமர்பிக்கிறீர்களோ அவ்வளவு சீக்கிரம் உங்களுடைய விசா வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இனிமேல் ஆஸ்திரேலியாவுக்கு புதிய விசா அப்ளை செய்பவர்கள் ஆஸ்திரேலிய உள்நாட்டு துறை அனுப்பும் மெயில்களையும்,வழிமுறைகளையும் சரியாகி பின்பற்றுவது தங்கள் பயோமெட்ரிக் தரவுகளை உடனுக்குடன் பதிவு செய்வது மிகவும் அவசியமாகும்.

## தப்பிச் சென்ற 17 விசாரணைக் கைதிகளில் 13 பேர் பிடிபட்டனர். மீதமுள்ள நான்கு பேரைத் தேடும் பணி தீவிரம்



சென்னை 28, அக்டோபர் 2026: சிறைகள் மற்றும் சீர் திருத்தப்பணிகள் துறை தலைமை இயக்குநர் அவர்களின் ஆணையின் பேரில், காவல்துறை தென்மண்டலத் தலைவர் மற்றும் சிறைத்துறை தலைவர் (தலைமையிடம்) ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, 26.10.2026 அன்று தேனி மாவட்ட சிறையிலிருந்து தப்பிச் சென்ற 17 கைதிகளில் 13 பேர் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதற்காக தேனி ஆயுதப்படை, சிறப்புக் காவல் படை மற்றும் தேனி மாவட்ட சட்டம்-ஒழுங்கு காவல் துறையினரை உள்ளடக்கிய 17 தனிப்படைகள் உதவியுடன் தப்பிச் சென்ற 13 கைதிகள் பிடிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மீதமுள்ள நான்கு கைதிகளைக் காவல்துறையினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர். அவர்களை விரைவில் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிடிபட்ட 13 பேரின் பெயர்கள் (இணைக்கப்பட்ட பட்டியலில் உள்ளபடி):

1. பிரவீன்குமார் - தமிழ்செல்வன் மகன், 2. சிலம்பரசன் - செல்வகுமார் மகன், 3. ராஜா சிக்கந்தர் - அப்துல் ரசாக் மகன், 4. ராஜ்குமார் - கலைஅரசன் மகன், 5. லிங்கபிரசாத் - ஜெகநாதமூர்த்தி மகன், 6. நிஷாந்த் - காந்தி மகன், 7. கருப்பசாமி - முருகன் மகன், 8. பாண்டிசெல்வம் - சக்திவேல் மகன்இ 9. சொலைமுகிலேஸ்வரன் - நாகலிங்கம் மகன், 10. தருண்குமார் - சின்னா மகன், 11. கார்த்திக் ராஜா - நாகராஜ் மகன், 12. முத்து இளங்கோவன் - முருகன் மகன், 13. சபரிநாதன் - பழனிசுந்தரம் மகன்



தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkurali@gmail.com
உள்ளது உள்ளபடி



## லேடீஸ் சர்க்கிள் இந்தியா, ஹேர் ஃபார் ஹோப் இந்தியா மற்றும் அடையார் புற்றுநோய் நிறுவனத்துடன் இணைந்து ஒரு மாபெரும் முடி தான இயக்கத்தை ஏற்பாடு செய்கிறது

சென்னை 28, அக்டோபர் 2026: லேடீஸ் சர்க்கிள் இந்தியா, ஹேர் ஃபார் ஹோப் இந்தியா மற்றும் அடையார் புற்றுநோய் நிறுவனத்துடன் இணைந்து, உலக சாதனை ஒன்றியத்துடன் (வேர்ல்டு ரெக்கார்ட் யூனியன்) கூட்டாக, ஒரு உலக சாதனை முயற்சியின் ஒரு பகுதியாக, ஒரே இடத்தில் 750-க்கும் மேற்பட்ட முடி தானங்களை ஒன்றிணைக்கும் நோக்கில், 2026 நவம்பர் 2 அன்று சென்னையில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திர மருத்துவக் கல்லூரியில் ஒரு மாபெரும் முடி தான இயக்கத்தை ஏற்பாடு செய்கிறது. கீமோதெரபி மற்றும் பிற சிகிச்சைகள் காரணமாக முடி உதிர்தலை சந்திக்கும் புற்றுநோயாளிகளுக்கு ஆதரவளிப்பதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. தானமாக வழங்கப்படும் முடி, புற்றுநோயாளிகள் மற்றும் அதிலிருந்து மீண்டவர்களிடையே தன்னம்பிக்கை, கண்ணியம் மற்றும் சுயமரியாதையை மீட்டெடுக்கும் செயற்கை முடிகளை (விக்) உருவாக்க உதவுகிறது.




இந்த முயற்சியின் மூலம், லேடீஸ் சர்க்கிள் இந்தியா தனிநபர்கள், மாணவர்கள், பள்ளிகள், கல்லூரிகள், அழகு நிலையங்கள் மற்றும் தன்னார்வலர்களை சூன்றிணைத்து, முடி தானம் குறித்த விழிப்புணர்வைப் பரப்பவும், இந்த அர்த்தமுள்ள நற்காரியத்திற்கு பங்களிக்க மக்களை ஊக்குவிக்கவும் நம்புகிறது.

இந்தக் கூட்டு முயற்சியில் இணைந்து, புற்றுநோயாளிகளுக்கு நம்பிக்கையையும் புன்னகையையும் கொண்டுவர உதவுமாறு லேடீஸ் சர்க்கிள் இந்தியா அனைவரையும் அழைக்கிறது.

## ஏஜ+ ஸ்மார்ட்போன்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களின் விலை நவம்பர் 15 முதல் ரூ. 3,000 வரை உயர்வு

சென்னை 28, அக்டோபர் 2026: ஏஜ+ ஸ்மார்ட்போன் நிறுவனம், தனது தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்மார்ட்போன் மாடல்களின் விலையை நவம்பர் 15, 2026 முதல் ரூ.1,000 முதல் ரூ. 3,000 வரை உயர்த்துவதாக இன்று அறிவித்துள்ளது. நவம்பர் 14 வரை நுகர்வோர் தற்போதைய விலையிலேயே ஸ்மார்ட்போன்களை வாங்கலாம்.

இந்த விலை உயர்வு ஏஜ+ பல்ஸ் 2 எஃப்இ, பல்ஸ் 2, நோவா 2 5ஜி, நோவா 2 நியோ 5ஜி, நோவா 2 பவர் 5ஜி, நோவா 2 ப்ரோ 5ஜி மற்றும் நோவா 2 அல்ட்ரா 5ஜி ஆகிய மாடல்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட வேரியன்ட்களுக்குப் பொருந்தும். ஏஜ+ நோவா ஃப்ளிப் 5ஜி ஸ்மார்ட்போனின் விலையில் மாற்றமில்லை; இது தொடர்ந்து ரூ. 49,999 விலையில் கிடைக்கும்.

உதிரிபாகங்கள் மற்றும் உற்பத்திக்கான மூலப்பொருட்களின் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் இந்த விலை மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய நுகர்வோருக்கு மலிவான விலையில் தொழில்நுட்பம், நம்பகமான செயல் திறன் மற்றும் சிறந்த மதிப்பை வழங்குவதில் ஏஜ+ ஸ்மார்ட்போன் நிறுவனம் தொடர்ந்து கவனம் செலுத்தும்.

## இந்தியா - நெதர்லாந்து இடையே இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான உயர்நிலை கூட்டங்களில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கலந்துகொண்டார்

சென்னை 28, அக்டோபர் 2026: மத்திய வர்த்தகம், தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தனது அரசு முறைப் பயணத்தின் தொடர்ச்சியாக 2026 அக்டோபர் 26 அன்று நெதர்லாந்தில் டச்சு அரசின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், டச்சு நிறுவனங்களின் முன்னணி பிரதிநிதிகள் ஆகியோருடன் தொடர்ச்சியான உயர்நிலைப் பேச்சுகளில் ஈடுபட்டார். இருதரப்புப் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், வர்த்தகம், முதலீட்டை வலுப்படுத்துதல், இந்திய - டச்சு நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல் ஆகியவை குறித்து இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

நெதர்லாந்து நாட்டின் வெளிநாட்டு வர்த்தக, மேம்பாட்டு ஒத்துழைப்புத் துறை அமைச்சர் திரு ஜோயர்ட் ஜோயர்ட்ஸ்மா, பொருளாதார விவகாரங்கள், பருவநிலை துறை அமைச்சர் திருமிகு ஹெலின் ஹெர்பர்ட் வடக்கு ஹாலந்து மாகாண ஆணையர் திரு ஆர்தர் வான் டைக் ஆகியோரை திரு பியூஷ் கோயல் சந்தித்தார்.

டச்சு பிரதிநிதிகள் சபையின் வெளிநாட்டு வர்த்தக, மேம்பாட்டு ஒத்துழைப்புக் குழு, ஐரோப்பிய விவகாரங்களுக்கான செனட் குழு ஆகியோருடன் அமைச்சர் உரையாடினார். இச்சந்திப்புகள் இருதரப்புப் பொருளாதார உறவுகள், வர்த்தகம் மற்றும் முதலீடு, பரந்த அளவிலான இந்தியா - ஐரோப்பிய யூனியன் பொருளாதார நட்புறவு ஆகியவை தொடர்பாகக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது.

திரு பியூஷ் கோயல், நெதர்லாந்து வர்த்தக, மேம்பாட்டு ஒத்துழைப்புத் துறை அமைச்சர் திரு ஜோயர்ட் ஜோயர்ட்ஸ்மா ஆகியோர் இணைந்து தலைமை தாங்கிய இந்தியா - நெதர்லாந்து வர்த்தகக் கூட்டமைப்பு இப்பயணத்தின் முக்கிய அம்சமாக அமைந்தது. இக்கூட்டத்தில் இந்திய, டச்சு வணிக முன்னணி பிரதிநிதிகள் உட்பட சுமார் 200 பேர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் இந்தியா - ஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படும் சிறந்த வாய்ப்புகள், குறிப்பாக இருதரப்பு வர்த்தகத்தை விரிவுபடுத்துதல், முதலீட்டு நட்புறவுகளை வலுப்படுத்துதல், சந்தை அணுகலை மேம்படுத்துதல் முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

## ஐசிஐசிஐ லைஃப் கேரன்டீடு இண்டெக்ஸ்டு பென்ஷன் பிளான் அறிமுகம்!

சென்னை 28, அக்டோபர் 2026: ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனம், 'ஐசிஐசிஐ லைஃப் கேரன்டீடு இண்டெக்ஸ்டு பென்ஷன்' என்ற ஓய்வுகால வருமானத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாதமான ஓய்வூதியம்1 மற்றும் மாறுபடும் ஓய்வூதியம்2 ஆகிய இரண்டின் ஞூலவையை வழங்குகிறது. இதில் உள்ள உத்தரவாதமான பகுதி வாடிக்கையாளர்களுக்கு நிலையான வருமானத்தை உறுதி செய்யும்போது, இண்டெக்ஸ் சார்ந்த மாறுபடும் பகுதி பணவீக்கத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்களின் ஞூத்தரவாத மான ஓய்வூதியப் பகுதியை 60% முதல் 100% வரை தேர்வு செய்யும் நெகிழ்வுத்தன்மை இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். மீதமுள்ள பகுதி நிஃப்டி 50 டோட்டல் ரிட்டர்ன் இண்டெக்ஸ் உடன் இணைக்கப்படும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் பங்குச்சந்தையில் பங்கேற்று, தங்களது பொற்கால ஓய்வுகாலத்திற்கான வருமானத்தை மேலும் அதிகரிக்கும் நன்மையைப் பெற முடிகிறது.

இந்த அறிமுகம் குறித்து ஐசிஐசிஐ லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை தயாரிப்பு அதிகாரி திரு. விகாஸ் குப்தா கூறுகையில், "மனிதர்களின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்து வரும் சூழலில், தனிநபர்கள் தங்களது நீண்ட ஓய்வுகாலத்திற்கான திட்டமிடுதலை மேற்கொள்வது அவசியமாகிறது. அதிகரித்து வரும் வாழ்வாதாரச் செலவுகள் மற்றும் மாறிவரும் நிதிசார் முன்னுரிமைகள் காரணமாக, ஸ்திரத்தன்மையை வழங்குவதோடு மட்டுமல்லாமல் சந்தை சார்ந்த வருமான வளர்ச்சியையும் அளிக்கக்கூடிய ஓய்வுகாலத் திட்டங்களைக் கொண்டிருப்பது மிக முக்கியமானது.

ஐசிஐசிஐ லைஃப் கேரன்டீடு இண்டெக்ஸ்டு பென்ஷன் திட்டம் மூலம், வாடிக்கையாளர்கள் தங்களுக்கு விருப்பமான உத்தரவாதமான வருமான அளவைத் தேர்ந்தெடுப்பதோடு, சந்தையின் செயல்பாடுகளிலிருந்து பயனடையும் வாய்ப்பையும் பெறுகிறார்கள். இந்த நெகிழ்வுத்தன்மை அவர்கள் தெளிவான முடிவுகளை எடுக்கவும், மிகுந்த நம்பிக்கை மற்றும் நிதிப் பாதுகாப்புடன் தங்களது ஓய்வுகாலத்தைத் திட்டமிடவும் வழிவகுக்கிறது.

இத்திட்டம் வாங்கியத் தொகையைத் திரும்பப் பெறும் வசதியுடன் 'தனிநபர் திட்டம்' (சிங்கிள்-லைஃப்) மற்றும் 'கூட்டுத் திட்டம்' (ஜாய்ன்ட்-லைஃப்) ஆகிய தேர்வுகளை வழங்குகிறது. ஓய்வூதியம் பெறுபவர் அல்லது கூட்டுத் திட்டத்தில் இறுதியாக வாழும் நபர் எதிர் பாராதவிதமாக மரணமடையும் பட்சத்தில், செலுத்திய மொத்த பிரீமியத்திற்கு இணை யான இறப்புப் பலன் (டெத் பெனிஃபிட்) பரிந் துரைக்கப்பட்ட நபருக்குத் (நாமினி) திரும்ப அளிக்கப்படும்."

## 'அத்வைதம்' உலகளாவிய நெருக்கடிகளுக்குத் தீர்வாக அமையும்; நாடுகள் 'ஜீரோ-சம்' சிந்தனையைக் கைவிட வேண்டும்: டாக்டர் ஜெய்சங்கர்



சென்னை 28, அக்டோபர் 2026: ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு, சின்மய அமிர்த மஹோத்சவ உலக மாநாட்டில், உலக அமைதி மற்றும் இராஜதந்திரம் குறித்த இந்தியாவின் பார்வையை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் பகிர்ந்து கொண்டார். புது தில்லியில் உள்ள பாரத மண்டபத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டின் மையப்பொருளான 'அத்வைதம்' (ஒரே உண்மை) குறித்துப் பேசிய அவர், குறுகிய மனப்பான்மையைக் கடந்து செல்ல அத்வைதக் கோட்பாடு நமக்குக் கற்றுத் தருகிறது என்று குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையின் படி, 'அத்வைதம்' அல்லது 'ஒரே உண்மை' என்ற தத்துவம், ஒரு தரப்பின் வெற்றி மற்றொரு தரப்பின் தோல்வியாக அமையும் 'ஜீரோ-சம் கேம்' அல்லது 'ஒருவர் வென்றால் மற்றவர் தோற்க வேண்டும்' என்ற மனநிலையை முழுமையாகக் கைவிடத் தூண்டுகிறது என்று டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தினார். அவர் கூறுகையில், "இதன் பொருள், நாம் பிரிக்க முடியாதவர்கள் என்ற நம்பிக்கையைப் புரிந்துகொள்வதும், அதைப் போற்றுவதும், நடைமுறைப்படுத்துவதும் ஆகும். இது, ஒரு தரப்பு வெற்றி மற்ற தரப்பின் தோல்வியாக அமையும் என்ற சிந்தனையைக் கைவிட்டு, கூட்டுத்தன்மை, பகிர்வு, பொதுவான அம்சங்கள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக நமது ஒற்றுமை ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகிறது" என்றார்.

உலகெங்கும் நிலவும் மோதல்களைக் குறிப்பிட்ட வெளியுறவுத் துறை அமைச்சர், அமைதி என்பது பிரிக்க முடியாதது என்று எச்சரித்தார். உலகின் ஏதோ ஒரு பகுதியில் நடக்கும் போர் அந்தப் பகுதியுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை; மாறாக, அது எல்லா இடங்களிலும் அமைதிக்கும் நிலைத்தன்மைக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறுகிறது. சர்வதேச மோதல்களையும் நெருக்கடிகளையும் தீர்ப்பதற்கு 'பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திரமே' சிறந்த வழி என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதை டாக்டர் ஜெய்சங்கர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.




தனது உரையில், பன்முகத்தன்மை கொண்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் தேவை என்று குறிப்பிட்ட அவர், உலகளாவிய நெருக்கடிகளின் போது சர்வதேச அமைப்புகள் வெறும் மௌனப் பார்வையாளர்களாக இருக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். பயங்கரவாதம் மற்றும் பிற சமகால சவால்களை எதிர்கொள்ள, சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து உறுதியான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

சின்மய மிஷனின் 75-வது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில், ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஸ்டீபன் ப்ரீஸ்னர் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## 155 மி.மீ. பீரங்கி தோட்டாக்களுக்கான பேஸ் ப்ளீட் அலகுகளை வழங்க ரூ.973 கோடி மதிப்பிலான ஆர்டரைப் பெற்ற சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ்

சென்னை 28, அக்டோபர் 2026: சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் நேட்டோ வாடிக்கையாளர் ஒருவருக்காக பேஸ் ப்ளீட் (பிபி) யூனிட்களைத் தயாரித்து வழங்குவதற்கான, யூஎஸ்டி 102.23 மில்லியன் (ரூ.973.64 கோடி) மதிப்பிலான ஆர்டரைப் பெற்றுள்ளது. இந்த ஆர்டர் 12 மாத காலத்திற்குள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 155மிமீ பீரங்கித் தோட்டா உற்பத்தி மதிப்புச் சங்கிலி முழுவதும் தனது திறன்களை விரிவுபடுத்துவதற்கான நிறுவனத்தின் உத்தியில் இந்த ஆர்டர் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

சிக்மா நிறுவனம் தனது பாதுகாப்புத் துறை உற்பத்தித் திறன்களைத் தொடர்ந்து வலுப்படுத்தி வரும் நிலையில், பேஸ் ப்ளீட் அலகுகளைத் தனது தயாரிப்புப் பட்டியலில் இணைத்திருப்பது, ஏற்கெனவே 155 மி.மீ. பீரங்கிக் குண்டுகள் மற்றும் ஃபியூஸ்கள் தயாரிப்பில் கொண்டுள்ள திறன்களை மேலும் விரிவுபடுத்துகிறது. இந்த முன்னேற்றம், உற்பத்தித் துறையில் தனது நிபுணத்துவத்தை ஆழப்படுத்துதல், தயாரிப்புப் பிரிவுகளை விரிவுபடுத்துதல் மற்றும் உலகளாவிய பீரங்கி வெடிமருந்துச் சந்தைக்கு மேலும் ஒருங்கிணைந்த தயாரிப்புத் தீர்வுகளை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட நிறுவனத்தின் உத்தியைக் (strategy) பிரதிபலிக்கிறது.

பேஸ் ப்ளீட் யூனிட் என்பது பீரங்கி எறிகணைகளின் காற்றியக்கச் செயல்திறனை மேம்படுத்தவும் அவற்றின் பயனுள்ள வரம்பை நீட்டிக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்பு வாய்ந்த தோட்டா பாகமாகும். ஒரு பீரங்கிக் குண்டின் பின் பகுதியில் ஒருங்கிணைக்கப்படும் இந்த யூனிட், பறக்கும்போது ஒரு கட்டுப்படுத்தப்பட்ட வாயு ஓட்டத்தை உருவாக்குகிறது. இது எறிகணைக்குப் பின்னால் உள்ள குறைந்த அழுத்தப் பகுதியால் ஏற்படும் காற்றியக்க இழுவையைக் குறைக்கிறது. பேஸ் ப்ளீட் தொழில்நுட்பம் நவீன 155 மிமீ பீரங்கித் தோட்டாக்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இது நீண்ட தூர பீரங்கி அமைப்புகளின் வரம்பையும் செயல்பாட்டுத் திறனையும் மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்த ஆர்டர், பீரங்கி வெடிமருந்து உற்பத்தித் துறையில் சிக்மா நிறுவனத்தின் நிலையை மேலும் வலுப்படுத்துவதுடன், மேம்பட்ட 155 மி.மீ. பீரங்கி வெடிமருந்துகளுக்கான முழுமையான உள்நாட்டு உற்பத்தித் திறன்களை உருவாக்குவதற்கான மற்றொரு முக்கிய முன்னேற்றமாகவும் அமைகிறது.

## இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தல்: நெதன்யாகுவின் ஆட்சி தொடருமா? முடிவுக்கு வருமா?



சென்னை 28, அக்டோபர் 2026: 2023ஆம் ஆண்டு ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேலில் நடைபெறவுள்ள முதல் பொதுத் தேர்தல் என்பதால், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆட்சி தொடருமா அல்லது முடிவுக்கு வருமா என்பதைத் தீர்மானிக்கும் முக்கியத் தேர்தலாக இது பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உள்ள 120 இடங்களுக்கான தேர்தலில், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான லிகுட் கட்சி போட்டியிடுகிறது. முன்னாள் ராணுவத் தளபதியும் யாஷார் கட்சியின் தலைவருமான காடி ஐசன்காட், நெதன் யாகுவுக்குப் பிரதான போட்டியாளராகக் கருதப்படுகிறார். ஹமாஸ், ஹிஸ்புல்லா மற்றும் ஈரானுடனான இஸ்ரேலின் உறவுகள், நாட்டின் பாதுகாப்பு, பொருளாதார நிலைமை மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றை மையமாகக் கொண்டு இரு தரப்பினரும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாலஸ்தீனியர்கள் விவகாரத்தில் நெதன்யாகு கடைப்பிடிக்கும் கடுமையான அணுகுமுறைக்கு நெருக்கமான நிலைப்பாட்டையே காடி ஐசன்காட் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, அவர் வெற்றி பெற்றாலும் காசா தொடர்பான இஸ்ரேலின் கொள்கைகளில் பெரிய மாற்றம் ஏற்படுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இவர்களைத் தவிர, டுகெதர் கட்சியைச் சேர்ந்த நப்தாலி பென்னட், முன்னாள் பிரதமர் யாயிர் லபிட் மற்றும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த யாயிர் கோலன் ஆகியோரும் அரசியல் களத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

இஸ்ரேல் தேர்தல் முறையைப் பொறுத்தவரை, வாக்காளர்கள் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு அல்லாமல் அரசியல் கட்சிகளுக்கே வாக்களிக்கின்றனர். கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் நாடாளுமன்ற இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

மொத்தமுள்ள 120 இடங்களில் குறைந்தபட்சம் 61 இடங்களின் ஆதரவைப் பெறும் கட்சி அல்லது கூட்டணியால் ஆட்சி அமைக்க முடியும். எனவே, இத்தேர்தலுக்குப் பிறகும் கூட்டணி ஆட்சியே அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்துக் கணிப்புகளில் காடி ஐசன்காட் முன்னிலையில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே வேளையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நெதன்யாகுவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். மேற்காசியாவில் ஏற்கெனவே பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், இஸ்ரேல் தேர்தல் முடிவுகள் அந்நாட்டின் பாதுகாப்புக் கொள்கை, காசா போர் மற்றும் ஈரானுடனான உறவுகள் உள்ளிட்ட விவகாரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், சர்வதேச அளவில் இத்தேர்தல் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது.

## ஆவின் பால் பொருட்களின் விலை உயர்வு அமல்: பொதுமக்கள் அதிர்ச்சி!



சென்னை 28, அக்டோபர் 2026: ஆவின் பால் பொருட்களின் விலை உயர்வு நாளை முதல் அமலுக்கு வருகிறது. ஆவின் பால் பொருட்களான தயிர், வெண்ணெய், நெய் உள்ளிட்ட 67 ஆவின் பால் பொருள்களின் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆவின் நிறுவனம் 175க்கும் மேற்பட்ட வகையான பால் மற்றும் பால் பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

ஆவின் பாலகங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் இவை விற்பனை செய்யப்படுகின்றன. சிறப்பு இனிப்புகள் தயாரிக்கப் பட்டு, நிறுவனங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு தேவைக்கேற்ப விநியோகிக்கப் படுகின்றன. தயிர், லஸ்ஸி, பனீர் உள்ளிட்ட முக்கியப் பொருள்களின் விற்பனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், மூலப்பொருள்களின் விலை உயர்வு, கொள் முதல் செலவுகள் மற்றும் இதர செலவுகள் அதிகரித்துள்ளதால், ஆவின் பால் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக ஆவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. தீபாவளி நெருங்கும் நிலையில், ஆவின் நெய், வெண்ணெய், இனிப்புப் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது, பொதுமக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து 500 மி.லி. ஆவின் நெய் ரூ. 365-ல் இருந்து ரூ.400 ஆகவும் 500 மி.லி. தயிர் ரூ.35-ல் இருந்து ரூ.40 ஆகவும் 250 கிராம் ஆவின் மைசூர்பா ரூ.140-ல் இருந்து ரூ.160 ஆகவும் விலை உயர்த் தப்பட்டுள்ளது. இருப் பினும், பொதுமக்களின் அத்தியாவசிய தேவையாக விளங்கும் ஆவின் பாலின் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்



சென்னை 28, அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புது தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

நாட்டில் உள்ள இளையோரின் விரிவான தொலைநோக்குப் பார்வையையும், துணிச்சலான மன உறுதியையும் அவர் பாராட்டினார்.

இந்திய இளைஞர்களின் சிந்திக்கும் விதமும், முன்னேற்றத்திற்கான அவர்களது தன்னம்பிக்கையும், உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்பு நடைபெற்ற மாநாட்டில் தாம் பங்கேற்றதை நினைவு கூர்ந்த அவர், கடந்த பத்தாண்டுகளில், புதிய இந்தியாவிற்கான நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பேசினார். இந்த புதிய மனநிலை, அசல் தொழில்நுட்பங்களை உருவாக்குவதையும், உலகளவில் புதிய வழிகளை அமைப்பதையும், சர்வதேச அளவில் சவால்களுக்குத் தீர்வு காண்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கும், அவற்றை மற்ற நாடுகளுக்கு வழங்குவதற்கும், உள்நாட்டிலேயே கோவிட்-19 தொற்றுக்கான தடுப்பூசிகளை உருவாக்கியதையும், முதல் முயற்சியிலேயே இந்தியா செவ்வாய் கிரகத்தை அடைந்ததையும், இதுவரை ஆய்வு செய்யப்படாத நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியதையும் மேற்கோள் காட்டிய பிரதமர், நாட்டிற்கான ஒரு துணிச்சலான தொழில்நுட்ப தொலைநோக்குப் பார்வையை எடுத்துரைத்தார். இந்தியா எதிர்காலத் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், துணிச்சலுடன் புதுமைகளைப் புகுத்த வேண்டும், மேலும் அவற்றை உருவாக்குவதில் உலகிற்கு முன்னோடி நாடாகத் திகழ வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தினார்.

பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பு, எண் முறை முதல் வானியல் வரை இந்தியாவின் வளமான கண்டுபிடிப்புப் பாரம்பரியத்தை எடுத்துரைத்த அவர், கடந்த ஆண்டில், பல சாதனைகள் மூலம் இவை நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்த அறிவியல் பாரம்பரியத்தை நவீன தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடன் இந்தியா முன்னெடுத்துச் செல்வதாக அவர் குறிப்பிட்டார். அக்டோபர் 30 அன்று டாக்டர் ஹோமி ஜஹாங்கீர் பாபாவின் பிறந்த தினத்தை நாடு கொண்டாடவுள்ள நிலையில், அவர் அண்மைக்கால முன்னேற்றங்கள் குறித்த தனது ஆய்வை அணுசக்தித் துறையிலிருந்து தொடங்கத் தேர்ந்தெடுத்ததை சுட்டிக்காட்டிய பிரதமர், எனவே, அணுசக்தியிலிருந்து தொடங்குவோம், என்று கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு மிகப்பெரிய அணுசக்தித் திறன் தேவைப்படுகிறது என்றும், இறக்குமதி செய்யப்படும் அணு எரிபொருளைச் சார்ந்திருப்பது எரிசக்திப் பாதுகாப்பிற்கு சவாலாக அமைகிறது என்றும் அவர் கூறினார்

## சென்னை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி அன்பில் மகேஸ் மனு

சென்னை 28, அக்டோபர் 2026: சென்னை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி அன்பில் மகேஸ் மனு தாக்கல் செய்தார். தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் தர லஞ்சம் பெற்றதாக பதிவான வழக்கில் அன்பில் மகேஸ் நேற்று கைது செய்யப்பட்டார். இந்நிலையில் சென்னை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி அன்பில் மகேஸ் மனு தாக்கல் செய்தார். அதில்; லஞ்சம் பெற்றதாக தனக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை. சட்டவிரோதமாக பயன்பெறும் வகையில் செயல்பட்டதாகவோ தனக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை. தனியார் பள்ளிகள் கோரிக்கை மீது பள்ளிக் கல்வித் துறை வழக்கமான நிர்வாக ரீதியான நடவடிக்கையே எடுத்தது. தனது பெயரை தவறாக பயன்படுத்தி, பணம் வசூலித்துள்ள தற்கு என்னை பொறுப் பாக்க முடியாது; கணையஅழற்சி நோயால் பாதித்துள்ள தனக்கு தொடர் மருத்துவ கண்காணிப்பு தேவைப் படுவதால் ஜாமீன் வழங்குக என்று கோரிக் கை விடுத்துள்ளார். ஜாமீன் கோரி அன்பில் மகேஸ் தாக்கல் செய்த மனு வரும் வியாழன் அன்று விசாரணை வர உள்ளது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
புதன்,
அக்டோபர் 28, 2026

## ஆர்.பி. பாலா இயக்கத்தில் நவீன் சந்திரா நடிக்கும் 'என் சி 51' படப்பிடிப்பு நிறைவு



சென்னை 28, அக்டோபர் 2026: இயக்குநர், தயாரிப்பாளர், டப்பிங் இயக்குநர் என திரையுலகில் பல்வேறு பரிமாணங்களில் முத்திரை பதித்து வரும் ஆர்.பி. பாலா, முன்னணி ஒளிப்பதிவாளர் பி.ஜி. முத்தையா உடன் இணைந்து தயாரிக்கும் புதிய படத்தில் நவீன் சந்திரா முதன்மை வேடத்தில் நடிக்கிறார்.

'லெவன்' படத்தில் சிறப்பான நடிப்பிற்காக பாராட்டுகளை குவித்த நவீன் சந்திரா, தான் நடிக்கும் பாத்திரங்களை மிகவும் கவனமாகத் தேர்வு செய்து வருகிறார். அவரது 51-வது படமான இது, ஒரு புதுமையான கதைக் களத்தை மையமாகக் கொண்டுள்ளது.

ஆர்.பி. பாலா பிலிம்ஸ், பி.ஜி. முத்தையா புரொடக்ஷன்ஸ் பேனர்களில் தயாராகி வரும் இப்படத்தின் படப்பிடிப்பு திங்கட்கிழமை (அக்டோபர் 26) அன்று சென்னையில் நிறைவுற்றது. படம் சிறப்பாக உருவாகியிருப்பதை குழுவினர் அனைவரும் இணைந்து கொண்டாடினர். ஹரிபிரியா ரோஷிணி, பால சரவணன், காளி வெங்கட் முக்கிய வேடங்களில் நடிக்கும் இப்படத்திற்கு பி.ஜி. முத்தையா ஒளிப்பதிவு செய்ய, சக்தி பாலாஜி இசையமைக்க, அஜய் மனோஜ் படத்தொகுப்பை கையாளுகிறார். கலை இயக்கம்: டி. கிராபோர்டு, ஸ்டண்ட்: டேஞ்சர் மணி, பாடல்கள்: மோகன் ராஜா, ஒலிப்பதிவு: ராஜா நல்லையா, மக்கள் தொடர்பு: நிகில் முருகன். அனீஷா ரெஹானா மற்றும் ஹநினோ ஷுன்சுகி கெவின் இந்த திரைப் படத்தின் இணை தயாரிப்பாளர்கள் ஆவார்கள்.

ஆர்.பி. பாலா, பி.ஜி. முத்தையா தயாரிப்பில் ஆர்.பி. பாலா இயக்கத்தில் நவீன் சந்திரா நடிக்கும் 'என் சி 51' படப்பிடிப்பு நிறைவடைந்துள்ள நிலையில், இதர பணிகளையும் முடித்து படத்தை திரையரங்குகளில் விரைவில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

## “விதிகளை மீறும் ருத்ரா கதாபாத்திரம் மிக சுவாரஸ்யமானது”- நடிகை ராதிகா ஆப்தே!




சென்னை 28, அக்டோபர் 2026: வசீகரிக்கும் தோற்றம், யாராலும் எளிதில் கணிக்க முடியாத நடவடிக்கை என வலம் வரும் ருத்ரா பல தலைமுறைகளாகப் பெண்களின் ஆதிக்கத்தில் இருந்து வரும் பேர்னூரு நகருக்குள் நுழைகிறாள். மற்றவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கட்டிக் காத்து வந்த அதிகார அமைப்பைப் பற்றியோ, அதன் விதிமுறைகளைப் பின்பற்றுவது பற்றியோ அவளுக்குக் கவலையில்லை. ‘ஃபோபியா’, ‘அந்தாதுன்’, ‘ஸ்கேர்ட் கேம்ஸ்’, ‘லஸ்ட் ஸ்டோரீஸ்’ உள்ளிட்ட படங்கள் மூலம் கவனம் ஈர்த்த நடிகை ராதிகா ஆப்தே, இதுவரை தான் ஏற்று நடித்திராத வித்தியாசமான கதாபாத்திரமாக ருத்ராவைக் சொல்கிறார்.

“தான் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளால் தனக்கான அடையாளம் தீர்மானிக்கப் படுவதை ருத்ரா ஒருபோதும் அனுமதிக்க மாட்டாள். அவள் துணிச்சலானவள், லட்சியவாதி, ஏற்கெனவே இருக்கும் அதிகார அமைப்பையே எதிர்த்துக் கேள்வி கேட்கத் தயங்காதவள். அதனால்தான் அவளுடைய கதாபாத்திரம் சுவாரஸ்யமானது” என்கிறார் ராதிகா.

ருத்ரா மற்றும் கீர்த்தி சுரேஷின் பவானி கதாபாத்திரம் என இருவருக்கும் இடையிலான மோதலை டிரெய்லர் முன்னிறுத்துகிறது. இருப்பினும், இந்த மோதலை வெறுமனே அதிகாரத்தை அடைவதற்கான போட்டியாக ராதிகா பார்க்கவில்லை. “அக்கா” தொடரில் நான் மிகவும் ரசித்த விஷயம் என்னவென்றால், இங்கு மோதல் என்பது யார் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது மட்டுமல்ல. ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் இயக்கும் வெவ்வேறு நம்பிக்கைகள், விசுவாசங்கள் மற்றும் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் முக்கியமான விஷயங்களும் இந்த மோதலுக்குக் காரணமாக இருக்கின்றன” என்கிறார்.

எது சரி, எது தவறு என்ற வழக்கமான வரையறைகளின் அடிப்படையில் ருத்ரா செயல்படுவதில்லை. மாறாக, தனது நம்பிக்கைகளுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்பச் செயல்படுகிறாள். கீர்த்தி சுரேஷ் கதாபாத்திரத்திற்கு முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரம் ருத்ரா. இந்த இரு கதாபாத்திரங்களுக்கும் இடையிலான மோதலே தொடரின் மையக் கருவாக அமைகிறது.

தர்மராஜ் ஷெட்டி எழுதி இயக்கியுள்ள ‘அக்கா’ தொடரை யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் தயாரித்துள்ளது. ஆதித்யா சோப்ரா, யோகேந்திர மோக்ரே மற்றும் அக்ஷய் விதானி ஆகியோர் நிர்வாகத் தயாரிப்பாளர்களாகப் பணியாற்றியுள்ளனர். ராதிகா ஆப்தே, கீர்த்தி சுரேஷ், தன்வி ஆஸ்மி, மகேஷ் மஞ்ச்ரேக்கர், அன்ஷுமன் புஷ்கர், மோனிகா பன்வார் உள்ளிட்ட பலர் இத்தொடரில் நடித்துள்ளனர்.

வசனங்களை ஹுசைன் தலால் மற்றும் அப்பாஸ் தலால் எழுதியுள்ளனர். ஜான் ஸ்டீவர்ட் எடுரி இசையமைத்துள்ளார். சங்க்யுக்தா காஸா மற்றும் சாஹீப் பாக்சி படத்தொகுப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். லக்ஷ்மி கேலுஸ்கர் தயாரிப்பு வடிவமைப்பையும், ஷீட்டல் இக்பால் ஷர்மா ஆடை வடிவமைப்பையும் கவனித்துள்ளனர். சண்டைக் காட்சிகளை சுனில் ரோட்ரிக்ஸ் வடிவமைத்துள்ளார்.

## இந்தியா - இந்தோனேசியா கூட்டுச் சிறப்புப் படைகள் பயிற்சியான கருடா சக்தி இந்தோனேசியாவில் தொடங்கியது




சென்னை 28, அக்டோபர் 2026: இந்தியா - இந்தோனேசியா இடையேயான கூட்டுச் சிறப்புப் படைகள் பயிற்சியான கருடா சக்தியின் 11-வது பதிப்பு இந்தோனேசியாவின் பேன்யூவாங்கியில் தொடங்கியது.

இப்பயிற்சி 2026 அக்டோபர் 27-ம் தேதி முதல் நவம்பர் 6-ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தியக் குழுவில் பாராசூட் படைப் பிரிவின் (சிறப்புப் படைகள்) வீரர்களும் இந்தோனேசியக் குழுவில் இந்தோனேசியச் சிறப்புப் படை வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இரு நாடுகளின் சிறப்புப் படைகளுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, ஒருங்கிணைந்த செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றை வலுப்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இப்பயிற்சியில் தடை தாண்டுதல், போர் களத்தில் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபடுதல், மலையேறுதல், வான்வழி தாக்குதல் பயிற்சி, போர் பயிற்சிகளை வலுப்படுத்துதல் உட்பட வனம் சார்ந்த சூழல்களில் சிறப்பு நடவடிக்கைகளுக்கான உத்திகள், நுட்பங்கள், செயல்முறைகள் ஆகிய வற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. அத்துடன் ஆயுதங்கள், உபகரணங்கள், செயல் நடவடிக்கைகள் தொடர்பான நிபுணத்துவம், தகவல் பரிமாற்றம் ஆகியவையும் இப் பயிற்சியில் இடம் பெறும்.

இக்கூட்டுப் பயிற்சியானது இரு குழுக்களின் ஒருங்கிணைப்பு போன்றவற்றின் மதிப்பீட்டு பயிற்சியுடன் நிறைவடையும். இப்பயிற்சி இந்தியா - இந்தோனேசியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு, இருதரப்பு உறவுகள் ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தும்.

## இந்தியக் கடற்படையின் பயிற்சிக் கப்பல்கள் கொழும்பு சென்றடைந்தது



சென்னை 28, அக்டோபர் 2026: இந்தியக் கடற்படையின் முதலாவது பயிற்சிக் குழுவைச் சேர்ந்த ஐஎன்எஸ் திர், ஐஎன்எஸ் சுஜாதா ஆகிய போர்க்கப்பல்களும், இந்தியக் கடலோரக் காவல் படையின் சாரதி கப்பலும் 2026 அக்டோபர் 26 அன்று இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை சென்றடைந்தன. கடற்படை இசைக் குழுவின் மரியாதையுடன் இலங்கை கடற்படை சார்பில் இக்கப்பல்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், இத்துறைமுகப் பயணமும் தொடங்கியது. இப்பயணம் இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையேயான தொழில்சார்ந்த தொடர்புகளுக்கும், முதலாவது பயிற்சிக் குழுவில் கடற்பயிற்சி பெற்று வரும் பயிற்சி மாலுமிகளுடனான கலந்துரையாடல்களுக்கும் ஒரு சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையின் கடற்படைப் பயிற்சி தலைமை இயக்குநர், கிழக்கு கடற்படைப் பிராந்தியத் தளபதி ஆகியோர் கப்பலில் இருந்த பயிற்சி மாலுமிகளுடன் கலந்துரையாடினர். இக் கலந்துரையாடல் மாலுமிகளுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், தொழில்முறை கடற்படைப் பயிற்சிகள் குறித்த கண்ணோட்டங்களைப் பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்பளித்தது.

இத்துறைமுகப் பயணத்தின் போது, இரு கடற்படைகளையும் சேர்ந்த வீரர்கள் கூட்டுப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு தொழில்முறை மற்றும் பயிற்சி சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இந்நடவடிக்கைகள் வீரர்கள் தங்களின் தொழில்சார் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் நடைமுறைகள் மற்றும் செயல்பாட்டு உத்திகளைப் புரிந்துகொள்ளவும் வாய்ப்பளிப்பதுடன், இரு கடற்படைகளுக்கும் இடையே பரஸ்பர புரிதலை வளர்த்து ஒருங்கிணைப்பை மேலும் வலுப்படுத்தும்.

## அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப் போவதில்லை: அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்



சென்னை 28, அக்டோபர் 2026: அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப் போவதில்லை என அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார். வெளிச்சந்தையில் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.41.50க்கு கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது. டிசம்பர் முதல் 2027 மே வரை 2,100 மெகாவாட் மின்சாரத்தை யூனிட் ரூ.41.50க்கு வாங்க மின்வாரியம் முடிவு செய்துள்ளதாக கூறப்பட்டது. வெளிச்சந்தையில் டிசம்பரில் 361 மெகாவாட் மின்சாரத்தை யூனிட் ரூ.41.50 என்ற விலையில் வாங்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது.

இந்நிலையில் ரூ.37 முதல் ரூ.41 வரையிலான விலையில் மின்சாரத்தை கொள்முதல் செய்யப் போவதில்லை என அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார். இன்று டெண்டர் திறக்கப்பட்ட நிலையில், பல நிறுவனங்கள் மிக அதிக விலையைக் குறிப்பிட்டுள்ளன. அடுத்த 3 மாதங்களுக்குத் தேவையான மின்சாரத்தைச் சமாளிக்க போதுமான மின்சாரம் நம்மிடம் உள்ளது. அடுத்த கோடைக்காலத் தேவைக்காக முன் கூட்டியே மின்சாரத்தைக் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ள இந்த விலைகள் நியாயமற்றவை.

இதற்கிடையே, அடுத்த 20 ஆண்டு களுக்கான மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், நடுத்தர மற்றும் நீண்ட கால டெண்டர்களை வெளியிட உள்ளோம். எனவே, இனி அதிக விலை கொடுத்து எரிவாயு மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யப் போவதில்லை. கீழே குறிப்பிடப்பட்டுள்ள டெண்டரை ரத்து செய்யவும் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளேன்" என்று கூறியுள்ளார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்